# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

---

*[1983, ஒத்தோபர் மாதம் 4 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஒத்தோபர் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை :சதம் 20* *தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்**

*[1983, ஒத்தோபர் மாதம் 04 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச.வ.—ஓ. 43/82
1559

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.**

2. 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) "இலங்கைக்கான சமாதான நீதிவான்கள்" எனும் தலைப்பின்கீழ் காணப்படும் கடைசி விடயத்தினை உடனடுத்து, பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் :—

"ஒவ்வொரு மாவட்ட நீதிபதியும், குடும்பநீதிமன்ற நீதிபதியும் நீதிவான்கள்

ஆரம்ப நீதிமன்றம் ஒவ்வொன்றினதும் நீதிபதி

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்

நீதிச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர்கள்

நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிருவாக அலுவலர்";

(ஆ) "இலங்கையின் பாகங்களுக்கான சமாதான நீதிவான்கள்" எனும் தலைப்பின்கீழ் காணப்படும்—

"மாவட்ட நீதிபதிகள், குடும்ப நீதிமன்றம் ஒவ்வொன்றினதும் நீதிபதி, நீதிவான்கள், ஆரம்ப நீதிமன்றம் ஒவ்வொன்றினதும் நீதிபதி, தொழில் நியாயசபை ஒவ்வொன்றினதும் தலைவர் } இவர்கள் தங்களது நியாயாதிக்கத்தை எந்தெந்த இடப்பரப்புகளில் பிரயோகிக்கின்றார்களோ அந்தந்த இடப்பரப்புகளுக்காக."

எனும் விடயங்களுக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் :—

"எந்தெந்த இடப்பரப்புகளுக்காக தமது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்றனரோ அந்தந்த இடப்பரப்புகளுக்கான தொழில் நியாயசபைகளின் தலைவர்கள்."; அத்துடன்

(இ) அவ்வட்டவணையின் முடிவில் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலம் :—

"கிராமோதய சபைகளின் தவிசாளர்கள், அவரவரது கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான சமாதான நீதிவான்களாய் இருப்பர்.".

ஓ 72059—3,000 (83/10)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு ரூபா 150 (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*